# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சே. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

******

முறையீட்டு மனு எண். 072/மா/2017

ஆணை எண். 132/2017

நாள் : 22/05/2017

11.04.2017 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி. – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 9,
சென்னை மாநகராட்சி,
சென்னை. – எதிர்மனுதாரர்

சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், (மண்டலம் – IX) நடைபாதை ஆக்கிரமிப்புகள் குறித்து "ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் மாநகராட்சி " என்று தலைப்பிட்டு 11.04.2017 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை, 2014–ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7–ன் கீழ் முறையீடாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 72/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி செய்தி குறித்து மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், (மண்டலம் – IX), அவ்வை சண்முகம் சாலை கடை உரிமையாளர்களிடம் கையூட்டு வாங்குவதால் சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி அலுவலர்கள் மறுக்கின்றனர் என்றும், இதனால் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், சிறு சிறு வாகன விபத்துகளும் ஏற்படுகின்றன என மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், ஆக்கிரமிப்புகள் குறித்து புகார் பலமாக எதிரொலிக்கும் போது மட்டும் சில ஆக்கிரமிப்புகள் அகற்றப் படுகின்றன என்றும் டிடிகே. சாலை முதல் கோபாலபுரம் வரை, நடைபாதை மற்றும் சாலை ஆக்கிரமிப்புகள் அதிகம் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தின் காரன்ஸ்மித் சாலை நடைபாதைகளிலும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளன எனவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட தினமலர் நாளிதழ் செய்தி குறித்து தேனாம்பேட்டை மண்டல அலுவலர் விரிவான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அவ்வை சண்முகம் சாலையின் டி.டி.கே. சாலை சந்திப்பிலிருந்து கோபாலபுரம் வரையிலான நடமாடும் கடை ஆக்கிரமிப்புகள் பலமுறை அகற்றப்பட்டுள்ளன என்றும், 13.04.2017 அன்று நீதிமன்ற வழக்கிற்குட்பட்ட பெட்டிக்கடை (Bunk) ஒன்றைத் தவிர மற்ற ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டனவென்று மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், நடைபாதைக் கடைகளை முறைப்படுத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ள "விற்பனைக் குழுவின்" (Vending Committee) பரிந்துரைகளின் அடிப்படையில் நடைபாதைக் கடைகள் முறைப்படுத்தப்படும் எனவும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. தேனாம்பேட்டை மண்டலம், அவ்வை சண்முகம் சாலை மற்றும் பிற சாலைகளில் நடைபாதை கடைகள் மற்றும் பெட்டிக்கடை ஆக்கிரமிப்புதாரர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறியப்பட்டு அவ்போதுக்கப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. மேலும், நடைபாதைக் கடைகளை முறைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட விற்பனைக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மண்டல அலுவலர் உறுதி அளித்துள்ளார். எனினும், சாலை ஓர ஆக்கிரமிப்புகள் மற்றும் நடைபாதை ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை காலமுறை தோறும் (Periodically) அகற்றப்படவேண்டும் என்றும் சாலையில் நடந்து செல்லும் பாதசாரிகளுக்கும் பிற வாகனங்கள் செல்வதற்கும் எந்தவித தடங்கல்களும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்யவேண்டும் என மண்டல அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –9,
சென்னை மாநகராட்சி,
எண்.4, 4–வது குறுக்குத் தெரு,
ஏரிக்கரை சாலை, சென்னை – 34.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்